117—

குடமுழுக்கு

***15217—திரு. ஆர். கணேஷ்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் தொகுதி, உதகமண்டலம் நகராட்சி, காந்தல் பகுதியில் உள்ள அருள்மிகு மூவுலகரசியம்மன் திருக்கோயிலின் இராஜகோபுரத்தைச் சீரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஊட்டியிலே அமைந்திருக்கின்ற மூவுலகரசியம்மன் கோயில் இராஜகோபுரத்தைச் சீரமைக்கவும், குடமுழுக்கு செய்வதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டிருக்கிறார். அந்தப் பகுதியில் சால கோபுரம் அமைந்திருப்பதால், இராஜகோபுரம் கட்டுவதற்குண்டான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு, சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் வாய்ப்பு இருந்தால் இராஜகோபுரம் கட்டுகின்ற பணிக்கு துறை முயற்சிக்கும்.

அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடமுழுக்கு நடத்தப்படுமா என்ற ஒரு கேள்வியையும் கேட்டிருந்தார். 16 பணிகள், ரூபாய் 39 இலட்சம் செலவிலே குடமுழுக்கு செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு, 25 சதவீத பணிகள் நிறைவுற்று இருக்கின்றன. மீதம் இருக்கின்ற 75 சதவீத பணிகளும் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவு செய்யப்பட்டு குடமுழுக்கு நடத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலின்படி, இன்றையதினம் வரையில் 620 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்திய பெருமை, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சியினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சாரும் என்பதை மாண்புமிகு

2023 ஏப்ரல் 6]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, உறுப்பினர் இருக்கையில் இல்லை என்றாலும் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி அவர்கள்.*

திரு. சா. மாங்குடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகை சட்டமன்றத் தொகுதி, கேத்தி பேரூராட்சி,* Lovedale shortcut *பகுதியில் ஆதி திராவிடர் மக்களின் கோயிலாக இருக்கக்கூடிய மாரியம்மன் கோயிலைப் புனரமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு இலட்சம் ரூபாய் இதுவரை கொடுக்கப்படவில்லை. அது உடனடியாகக் கிடைக்கப்பெறுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மேலும், எனது காரைக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொப்புடையம்மன் திருக்கோயில் வாரச் சந்தையை புதிதாகப் புனரமைப்பதற்கு, சென்ற நிதியாண்டில் ஒன்றரை கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்து, அந்த வளாகத்திலே ஒரு திருமண மண்டபம் அமைத்துத் தரப்படுமா என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் எனது தொகுதிக்குட்பட்ட தேவகோட்டை நகராட்சியில் உள்ள சிலம்பணி சிதம்பர விநாயகர் திருக்கோயில் தேவஸ்தான வெள்ளையூரணி பிள்ளையார் கோயிலைச் சுற்றி, நமது அறநிலையத் துறைக்குச் சொந்தமான கட்டடங்கள் சிதலமடைந்து, இடிந்த நிலையில் உள்ளன. எனவே, அறநிலையத் துறைக்கு வருவாய் வரும் வகையிலும், அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் வகையிலும், அந்தக் கட்டடத்தைப் புதிதாகக் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், கிராமப்புறத் திருக்கோயிலான அந்தத் திருக்கோயிலுக்கு ஒரு இலட்சம் ரூபாய்*

நிதி ஒதுக்கிட வேண்டுமென்று கேட்டார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்பு, கடந்த காலங்களில் கிராமப்புறக் கோயில்கள் மற்றும் ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற பகுதிகளிலுள்ள திருக்கோயில்களுக்கு 1 இலட்சம் ரூபாய் நிதி மற்றும் 1,000 திருக்கோயில்களுக்கு திருப்பணியும் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. கடந்த 2016 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை, அவர்களது ஆட்சிக்காலம் முடிகின்ற வரை ஒட்டுமொத்தமாக சுமார் 2,000 திருக்கோயில்களில்தான் திருப்பணிகள் செய்யப்பட்டிருந்தன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, அந்தக் கிராமப்புற கோயில்கள் மற்றும் ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற பகுதிகளிலுள்ள திருக்கோயில்களுக்கு 1 இலட்சம் ரூபாய் நிதி போதாது என்பதைக் கருத்திற்கொண்டு, 2 இலட்சம் ரூபாயாக வழங்க உத்தரவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்லாமல், 1,000 திருக்கோயில்கள் என்றிருந்ததை, 1,250 திருக்கோயில்கள் என்று உயர்த்தி உத்தரவிட்டார்கள். மேலும், ஒட்டுமொத்தமாக இருக்கின்ற 2,500 திருக்கோயில்களுக்கும், அந்தத் திருக்கோயில்களில் இருக்கின்ற பூசாரிகளையும் நேரில் வரவழைத்து, அவரது, திருக்கரங்களாலேயே, அந்த 50 கோடி ரூபாய் நிதியை வழங்கிய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வாரச் சந்தைப் பணி, ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற 1½ கோடி ரூபாய் நிதியின்மூலம் முழுமையாக இந்த ஆண்டிற்குள் நிறைவு செய்யப்படும். கூடுதலாக திருமண மண்டபம் கோரினார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, இதுவரை 50 திருமண மண்டபங்களுக்கு 141 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அந்தப் பணிகள் நிறைவுற்றவுடன், வருங்காலங்களில் நிதிநிலையைப் பொறுத்து, அந்தத் திருக்கோயிலுக்கு, நிதி இல்லையென்றாலும், ஆணையர் பொது நல நிதியைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.

2023 ஏப்ரல் 6]

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட, கூவனூர் ஊராட்சியில் தென்பெண்ணை ஆற்றங்கரையின் தென்புறத்தில் அமைந்திருக்கின்ற அகத்தீஸ்வரர் திருக்கோயில், 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பழமையான திருக்கோயில். இத்திருக்கோயில் புனரமைக்கப்பட்டு, இராஜகோபுரம் கட்டித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்டுக் கூறிய அந்த அகத்தீஸ்வரர் திருக்கோயில் என்பது, சட்டப் பிரிவு 46 (1)–ன்கீழ் வருகின்ற திருக்கோயில். ஆண்டு வருமானம் ரூ.10,000/–க்கும் மேல் உள்ள திருக்கோயில். அந்தத் திருக்கோயிலுக்கு, கடைசியாக 1994 ஆம் ஆண்டில் குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது. கிட்டத்தட்ட 28 ஆண்டுகளுக்குப் பிறகு, தற்போதுதான் அந்தத் திருப்பணிகள் எடுத்துக்கொள்ளப்படுவதற்காக, பொது நல நிதி வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. ரூபாய் 75 இலட்சம் செலவில் பொது நல நிதியில், அந்தத் திருக்கோயிலின் திருப்பணி, ஓரிரு மாதங்களில் மேற்கொள்ளப்படும். மேலும், இராஜகோபுரப் பணிகளுக்கான தொல்லியல் துறை வல்லுநர் குழுவை அனுப்பி ஆய்வு செய்து, அதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருக்குமாயின், மாவட்ட அளவிலான வல்லுநர் குழு, மாநில அளவிலான வல்லுநர் குழு ஆகியவற்றின் ஒப்புதல் பெறப்பட்டு, இராஜகோபுரம் அமைப்பதற்குண்டான நடவடிக்கைகளை இந்து சமய அறநிலையத் துறை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தம் கார்த்திகேயன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போர்க்குணம் கொண்ட இனிய தலைவர்,

இறையுணர்வு மிக்க கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு திரு. எடப்பாடியார் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் சார்ந்திருக்கும் முதல் படை வீடான திருப்பரங்குன்றம் தொகுதியில் அருள்மிகு திருமுருகன் கோயில் குன்றில் அமைந்திருக்கின்றது. அங்கிருக்கின்ற காசி விஸ்வநாதர் கோயிலுக்கு பங்குனித் தேரோட்டம் மற்றும் பங்குனித் திருவிழா நடைபெறுகின்ற நாட்களில், பக்தர்களும், ஏனைய மக்களும் மிகவும் இறையுணர்வோடு படியேறிச் சென்று ஆண்டவனை வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குன்றின்மேல் அமைந்திருக்கின்ற காசி விஸ்வநாதர் கோயிலுக்கு rope car வசதி ஏற்படுத்தித் தருகின்ற ஒரு நல்ல செய்தியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்குச் சொல்வாரா என்று எதிர்பார்க்கிறேன். மேலும், சரவணப்பொய்கை, இலட்சுமிதீர்த்தம் போன்ற இடங்களில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்வதாக உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசின் அறநிலையத் துறையால், அப்பணிகள் பாதுகாப்பான முறையில் விரைவாக முடிக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'உங்கள் தொகுதியில் முதல்வர்' திட்டத்தின்கீழ், 10 பணிகளில் ஒரு பணியாக, காசி விஸ்வநாதர் கோயில் பணியையும் குறிப்பிட்டுத் தந்திருந்தார். அதற்கு சாத்தியக்கூறு இருக்கின்றதா என வல்லுநர் குழு சென்று, ஆய்வு செய்து வந்திருக்கின்றது.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்னார் இனியவர் என்று பார்ப்பவர் அல்ல; சொன்னதையும் செய்பவர்; சொல்லாததையும் செய்பவர். ஆகவே, சாத்தியக்கூறுகள் இருப்பின், நிச்சயம் அந்த மலைக்கு ரோப் கார் அமைத்துத்

2023 ஏப்ரல் 6]

தருவார். ஏற்கெனவே அந்த மலையேறி தரிசனம் செய்வதற்கு 650 படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வயது முதிர்ந்தவர்கள்; படி ஏற முடியாதவர்களுக்கு இந்த ரோப் கார் என்பது அவசியம் என்பதை ஆட்சியும் உணர்ந்திருப்பதால், சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டபிறகு, அரசு ஒரு நல்ல முடிவிற்கு நிச்சயம் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பரங்குன்றத்தில் சரவணப்பொய்கையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான், 8 பணிகளை மேற்கொள்ள, ரூபாய் 13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. அதில் சரவணப்பொய்கையும் ஒரு பணி. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மீண்டும் ஒருமுறை கள ஆய்வு செய்து, உறுப்பினர் அவர்களின் எண்ணத்தின்படி, அந்த சரவணப்பொய்கை அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான் என்பது முதுமொழி. அதைப்போல, பொள்ளாச்சி–கிணத்துக்கடவு பிரதான தேசிய நெடுஞ்சாலையிலே, கிணத்துக்கடவு பேரூராட்சியிலே, அமைந்திருக்கிற பொன்மலை வேலாயுதசுவாமி கோயிலுக்கு, முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் உதவியோடு நிதியொதுக்கப்பட்டு, compound wall அமைக்கின்ற பணி, கொரோனா வந்ததன் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், உபயதாரருடைய பணிகள் அனைத்தும் ஓரளவுக்கு முடிந்துவிட்டன. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பொன்மலை வேலாயுதசுவாமி கோயில், திருப்பணியை மீண்டும் தொடங்கி, கும்பாபிஷேகம் நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருவார்களா என்பதை உங்கள் மூலமாகக் கேட்டறிய விரும்புகிறேன்.

அதேபோல, அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேகம் 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம்

தேதி நடைபெற்றது. இப்போது 14 ஆண்டுகளாகிவிட்டன. அந்த மாசாணியம்மன் கோயில் திருப்பணிக்கும் உரிய கும்பாபிஷேகப் பணியைத் தொடங்கி, சிறப்பாக நடத்தித் தருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலாயுதசுவாமி திருக்கோயிலுக்கு உபயதாரர்கள் மற்றும் ஆணையர் பொதுநல நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உபயதாரர்கள் நிதியில் மேற்கொள்ளப்படுகிற பணிகள் 80 சதவிகிதம் அளவிற்கு நிறைவுற்றிருக்கின்றன. அதேபோல, சுற்றுச்சுவர் அமைக்கின்ற பணிகள் தொடங்கப்பட்டு, பணிகள் எவ்வளவு முடிவுறுகிறதோ, அதற்கேற்றாற்போல், பொதுநல நிதியில் வழங்கப்பட்ட அந்தத் தொகைக்கு, ஒப்பந்ததாரர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. இன்னும் போர்க்கால அடிப்படையில் விரைவாக நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு உறுப்பினர் விரும்புகின்ற அந்தச் சுற்றுச்சுவர் பணியை வேகப்படுத்துவோம். மாசாணியம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்து 14 ஆண்டுகள் ஆகிவிட்டன. திருப்பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டார். அவர்கள் விட்டுவிட்டதை, இப்போது இந்த ஆட்சி ஏற்பட்டபிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆகம விதிப்படி, 12 ஆண்டுகளுக்கு மேலான, எந்தெந்த திருக்கோயில்களிலெல்லாம் திருப்பணிகள் தொடங்கப்பட வேண்டுமோ, அவற்றையெல்லாம் கணக்கெடுத்து, இந்த ஆண்டு மாத்திரம் 668 திருக்கோயில்களுக்கு திருப்பணிகளைத் தொடங்க உத்தரவிட்டிருக்கின்றார். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோரிய மாசாணியம்மன் திருக்கோயிலுக்கு, மண்டலக் குழு, தொல்லியல் குழு, அதேபோல், மாநிலக் குழு ஆகிய மூன்று குழுக்களுடைய ஒப்புதல் பெறப்பட்டு, 17 கோடி ரூபாய் செலவிலே திருப்பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

பால் குளிரூட்டும் நிலையம்

***53115—திரு. S. சந்திரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டத்தில் ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரன் அவர்கள் கேட்டிருக்கின்றார். ஓரிடத்தில் பால் கொள்முதல் செய்ய குறைந்தபட்சம் 3,000 லிட்டருக்குக் குறையாமல் இருக்கும்போது மட்டுமே அங்கு தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டத்தில் சராசரியாக நாளொன்றுக்கு 200 லிட்டர் என்ற அளவில்தான் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே, அங்கு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்*

திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிக் கடன் அட்டைகள் வழங்குதல், அதன்மூலம் அரசு மானியத்தில் கறவை மாடுகள் பெற்றுத் தருதல், சங்கத்திற்குக்*